சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண்.98/2016

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ம் நாள் DW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் திரு. பாலகிருஷ்ணன் த/பெ. பச்சையப்பன் — நாள் 06.04.2026

வயது. — வட்டம்

கிராமம். — மாவட்டம்.

**<u>4 ம் பிரதிவாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 4 ம் பிரதிவாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>**

நான் வழக்கில் 4 ம் பிரதிவாதி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். எனது தகப்பனார் பெயரில் உள்ள 23.09.1997 தேதியிட்ட ஆவண இணைய வழி நகல் பி.த.சா.ஆ.1. 03.12.2001 தேதியில் பங்காரு 5 ம் பிரதிவாதிக்கு கொடுத்த கிரைய ஆவணத்தின் இணைய வழி நகல் பி.த.சா.ஆ.2. வழக்கு சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் பி.த.சா.ஆ.3. பங்காரு பெயரில் உள்ள பட்டா நகல் பி.த.சா.ஆ.4.

வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)